பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆண்டு மாசி மீ 18 உ சனிக்கிழமை (02-03-1991) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 95

# மடு அகதிகள் இடமாற்றம்; ஐ. நா. தூதரகம் எதிர்ப்பு!

## அரசிடம் நேரில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

மடு அகதிகள் முகாமில் இருந்து அகதிகளை வேறு இடத்துக்கு மாற்றுவதற்குத் தாம் அனுமதிக்கப் போவதில்லை என்று ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயத்தின் ஸ்ரீலங்காவுக்கான வதிவிடப் பிரதிநிதி தெரிவித்திருக்கிறார்.

ஐ. நா. ஸ்தானிகராலயத்தின் கொழும்பில் உள்ள வதிவிடப் பிரதிநிதி திரு. டபிள்யு டி. கிளாரன்ஸ் இது குறித்து பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அகதிகள் ஸ்தானிகராலயம் மன்னாரில் மடு, பேசாலை ஆகிய இரண்டு இடங்களிலும் அகதி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## அகதிகள் இடம்பெயர்வு

கொழும்பு, மார்ச் 2

மடு தேவாலயப் பகுதியில் இருந்து தமிழ் அகதிகள் இரண்டாவது நாளான நேற்றும் வவுனியா மற்றும் மன்னார்த் தீவு ஆகிய பகுதிகளுக்கு பெரும் எண்ணிக்கையில் சென்றனர் என்று அறிவிக்கப்படுகிறது

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அரசுக்கு எதிராக மாணவர் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 2

ஸ்ரீலங்கா அரசின் அட்டூழியங்களை எதிர்த்து யாழ். நகரில் மாணவர்கள் நேற்று பெரும் ஆர்ப்பாட்ட —கண்டனப் பேரணி ஒன்றை நடத்தினர்.

ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் பேரணியில் எழுச்சியுடன் கலந்துகொண்டனர். ஆசிரியர்கள், ஆசிரிய கலாசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், தனியார் கல்வி நிறுவனத்தினர் ஆகியோரும் பேரணியில் பங்குபற்றினர்.

எட்டு அம்சக் கோரிக்கையை முன்வைத்து நடத்தப்பட்ட இந்தப் பேரணி, யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமாகி நல்லூர், செயலகம், நகரின் முக்கிய வீதிகள் ஊடாக வந்து மீண்டும் பல்கலைக்கழகத்தைச் சென்றடைந்தது.

பேரணியில் சென்றவர்கள் அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். சுலோக

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இலங்கை-இந்திய நட்புறவு ஒப்பந்தத்தின் நகலை ஏற்கமுடியாது-கல்பகே

புதுடில்லி, மார்ச் 2

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே ஏற்படவுள்ள நட்புறவு உடன்படிக்கையின் நகல் வாசகம் இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று என்றும்— இந்தியாவினால் தயாரிக்கப்பட்டுள்ள நகல் சரியானது அல்ல; இது இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டால் இதனைக் கிழித்து எறிய பலர் தயாராக இருக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இந்தியா ஆச்சரியம்

புதுடில்லி, மார்ச் 2

மன்னார்ப் பகுதியில் இருந்து தமிழ் அகதிகளை பெரும் எண்ணிக்கையில் வெளியேற்ற ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுத்திருப்பது குறித்து இந்திய அரசு ஆச்சரியம் தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் இத் தகவலை கடந்த வியாழக்கிழமை வெளியிட்டார்.

### மூச்சந்தி முரளி



அங்கை அகதிகளை தொல்லை பண்ணிக்கொண்டு இங்கை ஆச்சரியம் தெரிவிக்கிறது அதிசயமாய் எல்லோ இருக்கு...!

## ஹெலி வேட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 2

நேற்று நண்பகல் 12-15 மணியளவில் மாணவர் பேரணி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகம் முன்னால் மகஜர் சமர்ப்பிக்க கூடியிருந்த சமயம், நகரப் பகுதியில் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது.

கோட்டை, பண்ணைப் பகுதிகளை நோக்கியே வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

[ஓ-3-15-51]

## குண்டுவீச்சின் இடையே கிளிநொச்சியில் பேரணி

கிளிநொச்சி, மார்ச் 2

கிளிநொச்சி மாவட்டத்தில் பொம்மர்கள் குண்டுவீச்சு நடத்திக்கொண்டிருந்த அதேசமயம் மறுபுறத்தில் மாணவர்களின் கண்டன பேரணி நடைபெற்றது.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தில் ஆரம்ப

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கரடிப்போக்கில் நேற்றுக் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், மார்ச்2

கிளிநொச்சி கரடிப்போக்கு பகுதியில் இரு பொம்மர்கள் நேற்று நண்பகல் 11 மணியளவில் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர் இரண்டு லொறிகள் சேதமுற்றன.

லொறிச் சாரதியான கதிரிப்பிள்ளை துரைசிங்கம் [வயது 40—மயிலிட்டி], இராசையா தர்மலிங்கம் [வயது 34—யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடி] ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர்.

[உ-15]

## தாண்டிக்குளத்தில் தாக்கு

யாழ்ப்பாணம், மார்ச்2

நேற்று முன்தினம் தாண்டிக்குளம் இராணுவ 'சென்றி'க்குச் சமீபமாக ஸ்ரீலங்கா பொலீஸாரும், தமிழ் குழு ஒன்றைச் சேர்ந்தவர்களும் சோதனையில் ஈடுபட்ட சமயம். விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இதன் பின்னர் பொலீஸாரும் தமிழ்க் குழுவினரும் பொதுமக்கள் நின்ற பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் அதனால் தமிழ்ப் பொதுமகன் ஒருவர் பலியானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்க் குழு தரப்பிலும் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவித்தன.

[ஓ-15]

## மே மாதம் தமிழகத் தேர்தல்

சென்னை, மார்ச் 2

எதிர்வரும் மே மாதம் நடுப்பகுதியில் தமிழ் நாடு சட்டசபைக்கான பொதுத்தேர்தலை நடத்தும்படி தலைமைத் தேர்தல் ஆணையாளருக்கு மத்திய சட்டத்துறை அமைச்சு பணித்துள்ளது.

இத்தகவலை மத்திய சட்டத்துறை அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி நேற்று வெளியிட்டார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய மாநில அரசு மே மாதம் 3 ஆம் வாரத்தில் பதவி ஏற்கும் வகையில் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

[உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அடைவு கடைக்குரிய இரும்புக் கூடும், இரும்புப் பெட்டியும் விற்பனைக்குண்டு. காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை தொடர்பு கொள்ளவும்: 149/2, கஸ்தூரியார் வீதி, றொலெக்ஸ் பேக்கறி முன்பாக] யாழ்ப்பாணம். [14922]

ஆனந்தா கலண்டர் 1991 ஆங்கில, தமிழ் திகதிகளும் சகல விரதநாட்களும், அட்டமி, நவமி, அரசாங்க விடுமுறைகள், விஷேட தினங்கள் யாவும் அடங்கியது, ரூபா 22/- எங்கும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். [15985]

### தேவை

கிளிநொச்சி நகரில் நன்கு ஸ்தாபிக்கப்பெற்ற ஆங்கில வைத்தியசாலைக்கு அனுபவமும், திறமையும் உள்ள தாதிகள் தேவை. சிறந்த சம்பளமும், இருப்பிட வசதியும் தரப்படும். நேரிலோ கடித மூலமோ விண்ணப்பிக்கவும். வைத்திய அதிகாரி, சாந்தி வைத்தியசாலை, கிளிநொச்சி. [15988]

### கல்வி

6 ஆம் ஆண்டு முதல் வாலிபர், யுவதிகளுக்கு இலகு முறையிலும், விரைவிலும் English, Spoken English தனிப்பட்ட முறையிலும், வீடுகளுக்குச் சென்றும் கற்றுத் தரப்படும். நேரிலோ, தபால் மூலமோ குலம் மாஸ்டர், 75, A.V. Road, Ariyalai, Jaffna. [தபால்கட்டைச் சந்தி; புகையிரதக்கடவைக்கு அருகில்] [16008]

### புலமைப் பரிசில் பரீட்சை

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை [ஆண்டு 6] 03-03-91 ஞாயிறு மு.ப 8-00 — பி.ப 1-00மணி வரை நடைபெறும். பதிவு செய்யவும் ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. ஆண்டு 5 புலமைப் பரிசில் வகுப்பும் நடைபெறுகின்றது. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[16003]

### புத்தகங்கள்

பல்தெரிவு வினாக்கள் மூலம் பொது இரசாயனமும், பௌதிக இரசாயனமும் ஆக்கம்: திருமதி இராஜேஸ்வரி மகேஸ்வரன் B. Sc [இரசாயன பேராசிரியர் யாழ். பல்கலைக் கழகம்] ம. செல்வரத்தினம் B. Sc விலை ரூபா 75/- A/L உயர்தர மாணவர்களின் இரசாயனப் பகுதியின் முழு பகுதிகளும் அடங்கியது. வெளியீடு: விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-5784]

# கொழும்பு செல்வதில்லை பயிலுநர் ஆசிரியர் முடிவு

எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் கலந்து கொள்வதில்லை என்று யாழ். மாவட்ட பயிலுனர் ஆசிரியர் சங்கம் நேற்று முடிவு எடுத்துள்ளது.

இன்றைய காலகட்டத்தில் கருத்தரங்கில் கலந்துகொள்ள கொழும்பு வர முடியாதுள்ளதாகவும்—

அதற்கு மாற்று நடவடிக்கையாக யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கை ஒழுங்கு செய்து தருமாறும் சங்கம் கல்வி அமைச்சைக் கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

கொழும்பில் நடக்கவிருக்கும் கருத்தரங்கில் நாட்டில் உள்ள சகல பயிலுனர் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு கல்வி அமைச்சு அறிவித்திருந்தது தெரிந்ததே. [ஒ-3]


**COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE**

4 - MONTHS

COMMENCEMENT:- 12 - 03 - 1991

TIME TABLE:-
Tuesdays / Thursdays 10-30 — 12-30

Lectures By The Members of The Institute of Data Processing Management (London)

★ I. A. B. (London), Shorthand & Typing (Pitmans) நடைபெறுகின்றன.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(Leaders in Computer Education)

16, 3rd Cross Street,
Jaffna. [C-5859]


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 19 — 11 — 1958

உதிர்வு: 05 — 03 — 1988

அமரர்

**அருள்மணி சச்சிதானந்தன்**

[வதனி]

அன்புத் தெய்வமே, ஆருயிர்ச் செல்வமே! ஆறாத் துயரில் எம்மை மூழ்கடித்துவிட்டு, நீ மீளாத்துயில் கொண்டு மூன்று ஆண்டுகள் முடிந்துவிட்டதம்மா.

உன் ஆத்மா சாந்தியடைய என்றும்
உன் நினைவால் வாடும்:

அன்பு அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணா, தம்பிமார், தங்கை,
அத்தான்மார், மச்சாள்மார், மச்சான்மார்,
[illegible]

[16012]


**'A' LEVEL CENTRE**

Point Pedro Road, [1st Lane]
Jaffna.

**SPECIAL SPOKEN ENGLISH CLASSES**

[With Grammar]

By New and Quick Methods

**Mr. A. Reginald**

[Foreign Trained English Tutor]

Commencing on:-
02 - 03 - 91 [Sat.] 2 p. m.
Sat. & Sun. 2 p. m.

[C-5810]



பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின்

**கீதா வாஹினி**

நூல் வெளியீடு.

இடம்: பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம், பிள்ளையார் கோவிலடி, தாவடி

காலம்: 02 - 03 - 1991 சனிக்கிழமை மாலை 3 மணி — 5-30 வரை

ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய நூல்.

விலை ரூபா 50/- (ஐம்பது)

[16001]


## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள்



அமரர் அண்ணாவி

**நல்லையா ஜேம்ஸ் 'இராசநாயகம்**

[ஓளைப்பாறிய இராணுவக் கோப்பரல்]

பிறப்பு: 08 - 09 - 1919

இறப்பு: 01 - 02 - 1991

இவரின் ஆன்ம சாந்திக்காக புனித அன்னம்மாள் ஆலயம் பாண்டியன் தாழ்வில் 02-03-91 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு அருட்தந்தை மேரி யோசப் அடிகளாரால் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். ஞாயிற்றுக்கிழமை 03-03-91 நண்பகல் வீட்டில் வழிபாடும், மதிய போசனமும் நடைபெறும்.

இவரின் பிரிவால் துயருறுவோர்;
அன்பு மனைவி, மக்கள்,
சகோதரர், மைத்துனர், மைத்துனி,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டி.

12/2, சந்தானமாதா கோயில்,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

மகிழ்ச்சியூட்டும் இடத்தில் —
எனக்கு பங்கு கிடைத்தது
என் உரிமைப் பேறு —
எனக்கு நேர்த்தியானதாயிற்று.

[15681] சங். 15-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வளைகுடா யுத்த நிறுத்தம்

வளைகுடா யுத்தம் தற்போது முடிவுக்கு வந்திருக்கிறது. அதாவது அமெரிக்கா தரப்பிலான பன்னாட்டுப் படைகள் தற்காலிக யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இணங்கியதன் மூலம் இலங்கை நேரப்படி வியாழன் காலை 10-30 மணிக்கு போர் ஓய்வு ஏற்பட்டிருக்கிறது.

இந்த யுத்த நிறுத்தம் முழு உலகின் வரவேற்பையும் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

குவைத்திலிருந்து ஈராக் படைகளை வெளியேற்றுவதற்காக பன்னாட்டுப்படையினரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த யுத்தத்தில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். பலகோடி டாலர் பெறுமதியான உடைமைகள் அழிக்கப்பட்டுவிட்டன.

தரையுத்தம் மூலம் மேலும் பேரழிவு ஏற்பட இருந்த சமயம், குவைத் தொடர்பான ஐ. நா. தீர்மானங்களை அப்படியே ஏற்பதாக ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் அறிவித்திருந்தார். தனது படைவாபஸையும் ஆரம்பித்திருந்தார். இதனால் தமது முழுக்குறிக்கோள்களும் நிறைவேற முன்னர் யுத்த நிறுத்தம் செய்யவேண்டிய நிலைக்குள் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் தள்ளப்பட்டன.

யுத்தம் ஆரம்பித்தபோது அமெரிக்கா மூன்று நோக்கங்களைக் கொண்டிருந்தது. ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனை ஒழித்துக் கட்டுவது, ஈராக்கின் இராணுவ வல்லமையை அழிப்பது, குவைத்தில் இருந்து ஈராக்கிய படைகளை விரட்டி அடித்து குவைத்தை விடுவிப்பது ஆகியவையே இவை ஆகும்.

இவற்றுள் குவைத் விடுவிக்கப்பட்டு விட்டது. ஈராக் இராணுவ வல்லமையும் ஓரளவு அழிக்கப்பட்டு விட்டது. ஆனால் ஜனாதிபதி சதாம் ஹுசேனை ஒழித்துக்கட்டும் முயற்சியில் அமெரிக்கா தோல்வி கண்டு விட்டது.

ஆகவே இந்த தகரயற்றில் அமெரிக்கா நியாய சிந்தனையுடன் செயற்படுமா என்பது சந்தேகமே.

அமெரிக்கா எதிர்பார்த்ததுக்கு மாறாக மத்திய கிழக்கில் அரபு உணர்வலைகளை இந்த யுத்தம் ஏற்படுத்தி இருக்கிறது.

காமல் அப்துல் நாஸர் தலைமையில் 1956 சூயஸ் யுத்தத்தின் போது ஏற்பட்டது போன்ற உணர்வலை மீண்டும் மத்திய கிழக்கில் ஏற்பட்டு வருகிறது. அது மட்டும் அல்ல. சதாம் எதிர்ப்பு அலையை ஏற்படுத்துவதற்கு மாறாக அரபு நாடுகள் மத்தியில் அமெரிக்க எதிர்ப்பு அலையை இந்த யுத்தம் ஏற்படுத்தி உள்ளது.

ஆகவே அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் இவற்றை மனதில் கொண்டு வளைகுடாப் பிரச்சினையை அணுக வேண்டும்.

---

★ பொருளாதாரம் அடிப்பெட்டிக்கு

# செலாவணிக் கையிருப்பு

# 2 மாதத்துக்கே போதும்!

கொழும்பு, மார்ச் 2

அரசின் பொருளாதாரம் மிகக் கேவல நிலை அடைந்துள்ளது!

செலாவணிக் கையிருப்பு அடிப்பெட்டிக்குப் போய் விட்டது!

இரண்டே இரண்டு மாதங்களுக்குப் போதுமான பொருள்களை இறக்குமதி செய்யப் போதுமான வெளிநாட்டுச் செலாவணி மட்டுமே ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கைவசம் உள்ளது.

அந்த அளவிற்கு நாட்டின், செலாவணி மற்றும் நிதி நிலைமை வற்றி விட்டதாக அரச உயர் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

இதேவேளை, 15 சதவீதமாக உள்ள பணவீக்கத்தை 10 சதமாகவேனும் குறைக்க நடவடிக்கை எடுக்காவிடில் மேலும் நிதி உதவி தரமுடியாது என்று சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்தை எச்சரிக்கை செய்துள்ளது.

பணவீக்கத்தை 10 சதவீதமாகக் குறைக்கும் பொருட்டு, லாபமின்றி இயங்கும் பொது நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மான்யங்களை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் ச. நா. நிதியம் நிபந்தனை விதித்திருக்கிறது.

50 கோடி டொலர் கடனுதவி தருமாறு ஸ்ரீலங்கா அரசு சர்வதேச நாணய நிதியத்துக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

அதனை தொடர்ந்து பிரஸ்தாப நிதியத்தின் தூதுக்குழு ஒன்று தற்போது கொழும்பில் தங்கியிருந்து, அரசின் கடனுதவிக் கோரிக்கை குறித்து ஆராய்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. [அ-எ]

## இரத்ததானம்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இரத்த தானம் வழங்கினர். மொத்தம் 41 பைந் இரத்தம் வழங்கப்பட்டது.

கல்லூரியின் லியோ கழகத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் இரத்தம் வழங்க முன்வந்த போதும் 41 பேரே தெரிவு செய்யப்பட்டு இரத்தம் பெறப்பட்டது. [ஓ-15]

## சிரமதானப் பணிமூலம் திருத்திய காணியில் மரவள்ளி

சுதுமலை தெற்கு காந்தி வீதி அம்பாள் சனசமூக நிலையத்தினர் பல வருடங்களாகத் தேடுவாரற்றுப் பற்றையாகக் கிடந்த ஐந்து பரப்புக் காணியை அண்மையில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். இந்தக் காணியில் சிரமதானம் மூலம் 500 க்கும் மேற்பட்ட மரவள்ளிக் கட்டைகள் நடப்பட்டுள்ளன. [இ-30]

## பத்து நாள் முத்தமிழ் விழா ஏப்ரல் 6 இல் ஆரம்பம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவினர் நடத்தும் முத்தமிழ் விழா எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து பத்து நாட்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட இருக்கிறது.

இம் முத்தமிழ் விழாவில் பங்குகொள்ள விரும்பும் இசை, நடன, நாடகக் கலைஞர்கள் எதிர்வரும் 10-3-91க்கு முன்பதாக விண்ணப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

நடன நிகழ்வில் பரதம், கதகளி, உழவர் நடனம், மீனவர் நடனம், கும்மி கோலாட்டம், கரகம், காவடி என பல்வேறு வகைப்பட்டதாகவும்; இவை ஒவ்வொன்றும் 7 நிமிடங்களுக்கு மேற்படாததாகவும் அமைதல் வேண்டும் என்றும்—

நாட்டிய நாடகம் 45 நிமிடங்களுக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சமூக மேம்பாடு, [illegible] டச் சிந்தனை [illegible] போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதை ஆதாரமாகக் கொண்ட கதைகள், கற்பனைகள் மூலம் உருவாகும் பாடல்களுக்கு அமைவாக நடன, நாட்டிய, நாடக நிகழ்வுகள் அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சிகளில் பங்கேற்க விரும்பும் கலைஞர்கள் தமது விண்ணப்பங்கள் மற்றும் பிரதிகளை, முத்தமிழ் விழாப் பொறுப்பாளர், விடுதலைப்புலிகள் கலை, கலாசாரப் பிரிவு, கோண்டாவில், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இம்மாதம் 10 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த கலைஞர்கள் தத்தம் மாவட்ட மக்கள் முன்னணிச் செயலகங்கள் மூலம் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என்று [illegible] தெரி[illegible] [அ]

---

## பி. எஸ். நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், மார்ச் 2

சிறந்த கல்விமான்களில் ஒருவரும், யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபருமான அமரர் பி. எஸ். குமாரசுவாமி அவர்களின் நினைவுப் பேருரை, அகில இலங்கைக் கம்பன் கழக ஆதரவில் நடைபெற உள்ளது.

நல்லூர் கம்பன் கோட்டத்தில் நாளை [ஞாயிறு] காலை பத்து மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ந. சபாரத்தினம் தலைமையில் நினைவுப்பேருரை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம், அமரர் குமாரசுவாமியின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து வைப்பார்.

''பாடசாலை நிர்வாகம் – இலட்சியமும் நடைமுறையும்'' என்ற பொருளில் ஹாட்லிக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. க. பூரணம் பிள்ளை நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

## குவைத்தை புனரமைக்க ஈராக் எண்ணெய் வருமானம்

குவைத்தை புனர்நிர்மாணம் செய்ய ஈராக் தனது எண்ணெய் வருமானத்தில் ஒரு பகுதியை வழங்க வேண்டும் என்று அமெரிக்கா வற்புறுத்தி உள்ளது.

யுத்த நிறுத்தத்துக்கு ஈராக் அரசு இணங்கியுள்ள செய்தியை வெளியிட்ட பக்தாத் வானொலி நடந்துமுடிந்த வளைகுடாப்போரில் பன்னாட்டுப் படையினரைத் தோற்கடித்து ஈராக் படைகள் வெற்றிவாகை சூடின என்பதை அடிக்கடி அறிவித்தது.

---

## மடு அகதிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முகாம்களைப் பராமரித்து வருகிறது.

இவற்றில் மடு அகதி முகாமில் உள்ள அகதிகளை வவுனியாவுக்கு மாற்றப் போவதாகவும், முகாமை மூடிவிடுமாறும் அரசாங்கம் ஐ. நா. ஸ்தானிகராலயத்தைப் பணித்திருப்பதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அந்தப் பணிப்புரையை தாம் ஏற்றுக் கொள்ளமுடியாது என்றும், அகதிகளை இடம்மாற்றுவதற்கு அனுமதிக்க முடியாது என்றும் திரு. கிளாரன்ஸ் நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளைக் கண்டு தெரிவித்தார்.

ஜெனிவாவில் உள்ள தமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அங்குள்ள உயர் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்த பின்னரே திரு. கிளாரன்ஸ் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்தார் என அறியவருகிறது.

இதேவேளை திரு. கிளாரன்ஸ் இம்மாதம் 7 ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெற இருக்கும் முக்கிய கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ள அங்கு செல்கிறார். குழப்பம் நிலவும் நாடுகளில் உள்ள —ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயங்களின்— வதிவிடப் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள்.

பிரஸ்தாப மாநாட்டிலும் மடு அகதி முகாம் விடயத்தை எழுப்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கிளாரன்ஸ், ஐ. நா. சபையின் செயலாளர் நாயகத்தின் செயலாளரான திரு. ஓகாட்டாவுடன், தமிழ்ப் பிரதேசங்களின் இப்போதைய நிலையை எடுத்துரைப்பார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. [அ-3]

---

## குண்டு வீச்சின்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மான இந்தப் பேரணியில் சுமார் ஆயிரத்து ஐநூறு மாணவர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள் பங்குபற்றினர்.

திருநகர் பிரதான வீதி ஊடாகச் சென்ற ஊர்வலம் கிளிநொச்சி அரச அதிபரின் செயலகத்தை அடைந்தது. அங்கு வைத்து அரச அதிபரிடம் மாணவர்கள் சார்பில் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

பின்னர் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கண்டனக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

மாணவர்களின் பேரணி நடைபெற்ற சமயம் அருகில் கரடிப்போக்குச் சந்திப் பகுதியில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுக்குச் சென்ற நான்கு மீனவர்களும் எங்கே?

யாழ்ப்பாணம், மார்ச் 2

தொண்டமனாறு கடற்பகுதியில் நேற்று முன்தினம் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் நால்வர் திரும்பி வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

இதே சமயம் அன்றைய தினம் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் கடற்பகுதியில் மீன்பிடித் தொழில் செய்துகொண்டிருந்த இரத்தினவேல் என்பவரும், கெருடாவிலில் சிங்காரம் என்பவரும் உயிரிழந்தனர் என்று செய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே. [ஒ]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

கடந்த ஜனவரி மாதம் மாவிட்டபுரத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த லெப். கபிலர் [இராசரத்தினம் இராசபாண்டியன் — பாண்டியன் தாழ்வு] நேற்று முன்தினம் வீரமரணம் அடைந்தார். [உ-எ]

## டியூட்டரிகளை நாளை மூடுக!

யாழ்ப்பாணம், மார்ச் 2

வங்காலையில் நடந்த அதிபர்கள், ஆசிரியர்கள் படுகொலைகளைக் கண்டித்து, யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களை நாளை ஞாயிற்றுக்கிழமை மூடிவிடுமாறு தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் வேண்டுகோள் விடுவித்துள்ளது. [ஒ-3]

## ஷெல் தாக்கு

புங்குடுதீவு, மார்ச் 2

நயினாதீவு கடற்படை முகாமில் இருந்து நேற்றுக் காலை 7. 30 மணி தொடக்கம் கடற்படையினர் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதலை நடத்தினர். ஷெல்கள் குறிகட்டுவான் கரையோரத்தில் உள்ள மணல் வெளியில் விழுந்து வெடித்தன.

இதனால் நேற்று படகுச் சேவையும் ஸ்தம்பித்திருந்தது. [ஒ-131]

## ஊர்வலம்

புங்குடுதீவு, மார்ச் 2

வங்காலையில் அதிபர், ஆசிரியர்கள் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து புங்குடுதீவு கொத்தணிக்கு உட்பட்ட அனைத்துப் பாடசாலைகளின் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். [ஒ-121(

## அராலி துறையிலும்

யாழ்ப்பாணம், மார்ச் 2

நேற்றுப் பகல் 12-30 மணியளவில் அராலித்துறைப் பகுதியிலும் ஹெலி வேட்டுகளைத் தீர்த்தது. அங்கு கூடி நின்றிருந்த பயணிகள் காயமின்றித் தப்பிக் கொண்டனர். [ஒ-15]

## ஒக்ஸ்போர்ட் அகராதியில் புலிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றி லண்டன் ஒக்ஸ்போர்ட் அகராதியின் 1990-91 ஆம் ஆண்டுப் பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"Tigers"—என்ற சொல்லுக்கு "ஸ்ரீலங்காவில் தமது சமூகத்துக்கு சுதந்திரம் கோரும் தமிழ் இராணுவ அமைப்பு" என்று இந்தப் புத்தகத்தில் கருத்துக் கூறப்பட்டுள்ளது. [உ]

## இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 2

இன்று காலை 9-00 மணியளவில் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த பயிலுனர் ஆசிரியர்களை அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கு சமுகம் தருமாறு பயிலுனர் ஆசிரியர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். [ஒ]

★ ★

உரும்பிராய், மார்ச் 2

உரும்பிராய் இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தினால் திருவள்ளுவர் தின விழா இன்று மாலை 4 மணி முதல் உரும்பராய் கிழக்கு சிவபூதராயர் ஆலயத்தில் கொண்டாட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. [ஒ-154]

★ ★

தென்மராட்சி, மார்ச் 2

சாவகச்சேரி - கச்சாய் வீதி உதயசூரியன் சனசமூக நிலையத்திற்கு முன்பாக தமிழக முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆரின் நினைவுச் சிலை இன்று காலை நிலையத் தலைவர் க. தம்பிப்பிள்ளையினால் திறந்து வைக்கப்படவுள்ளது. [ஒ-117]

# ஊழல் சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 2

நற்சான்றுப் பத்திரங்களை வழங்க நூறு ரூபா முதல் 150 ரூபா வரை லஞ்சம் பெற்று வந்ததாகக் கூறப்படும் அரியாலையைச் சேர்ந்த கிராமசேவையாளர் ஒருவர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ஊழல் தடுப்புப் பிரிவினரிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

அவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. இத் தண்டப் பணம் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்காக, வடக்கு, கிழக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திடம் வழங்கப்பட்டது.

மு. ஐயாத்துரை என்பவருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதேபோன்று லக்டோஜன் பால்மாவை 13 ரூபா கூட்டிவிற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மு. பொன்னம்பலம் என்ற வியாபாரிக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. [உ]

## பாணில் கம்பித் துண்டு; சாப்பிட்டவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், மார்ச் 2

பாண் சாப்பிட்ட ஒருவர், அதிலிருந்த கம்பித் துண்டு தொண்டையில் குத்தியதால், யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புளியங்கூடலில் நேற்று முன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுவாணி லியோ [28 வயது] என்பவரே காயமடைந்தார்.

சாப்பிடுவதற்காக பாணைப் பிய்த்தபோது அதில் 'ஸ்ரேப்பிலர் பின்' ஒன்று இருக்கக் கண்டேன். எனினும் அதை எறிந்துவிட்டு பாணைச் சாப்பிட்டேன்—

அப்படிச் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது தொண்டைக்குள் ஏதோ குத்தியதைப்போன்று வலித்தது. உடனே பாணை காறித்துப்பினேன். அப்போது இரத்தமும் வெளியே வந்தது—

பாணில் இருந்த கம்பித்துண்டு போன்ற ஒன்றே தொண்டையில் குத்தியிருக்க வேண்டும் — என்று சம்பந்தப்பட்டவர் தெரிவித்தார். [ஒ-ஜ-3]

## அமெரிக்கப் படைகள் உடனடியாக வெளியேறா

★ வளைகுடாவில் ஸ்திரமான போர் நிறுத்தம் ஏற்படும் சூழ்நிலை உருவாகும் வரை ஈராக்கின் தெறகுப் பகுதியில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படைகள் வெளியேறா.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டிக்சேனி இவ்வாறு அறிவித்தார்.

## அல்ஜீரியாவில் தஞ்சம் கேட்கிறார் சதாம்?

லண்டன், மார்ச் 2

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் அல்ஜீரிய அரசாங்கத்திடம் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருப்பதாக பிரெஞ்சு நாளிதழ் 'லெமோண்ட்' நேற்று செய்தி வெளியிட்டது.

சதாமுக்கு தஞ்சம் அளித்த பின்னர், அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்பது குறித்து அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகளிடம் அல்ஜீரியா உத்தரவாதம் கோரியிருப்பதாகவும் பிரெஞ்சு நாளிதழ் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

பிரெஞ்சு பத்திரிகைச் செய்தியை அல்ஜீரியாவோ அல்லது வேறு வட்டாரங்களோ ஊர்ஜிதம் செய்யவில்லை என்று பி. பி. சி. வானொலி நேற்று இரவு அறிவித்தது. [ஒ.எ]

## இரு தரப்பும் இன்று பேச்சு

லண்டன், மார்ச் 2

நிரந்தர யுத்த நிறுத்தம் குறித்துப் பேசுவதற்காகப் பன்னாட்டுப் படைகளின் உயர் அதிகாரிகள் இன்று [சனிக்கிழமை] ஈராக் செல்கிறார்கள்.

யுத்த நிறுத்தத்தின் இராணுவ அம்சங்கள் இச் சந்திப்பின் போது ஆராயப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதே வேளை, யுத்த நிறுத்தம் நிரந்தரம் ஆகும் பட்சத்தில் ஈராக் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு ஆதரவளிக்க அமெரிக்கா இணக்கம் தெரிவித்திருக்கிறது. [அ]

## அரசுக்கு எதிராக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அட்டைகளும், பதாகைகளும் எடுத்துச் செல்லப்பட்டன. மாணவர்கள் கோஷங்களை வெகு உணர்ச்சியுடன் கோஷித்தபடி சென்றதை அவதானிக்க முடிந்தது.

நல்லூரில் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம், யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திரு. கே. சண்முகநாதன் ஆகியோரிடம் மகஜர்களும் வழங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்தில் வைத்து அதிகாரிகளிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

இறுதியில் யாழ். பல்கலைக் கழகத்தில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. அங்கு மாணவப் பிரதிநிதிகள் பலர் உரையாற்றினர்.

மாணவர்கள் முன்வைத்த எட்டு அம்சக் கோரிக்கைகள் வருமாறு:-

★ பாடசாலைகள், பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் கைது செய்தல்— கடத்தப்படுதல் — கொலை செய்யப்படுதல் ஆகியனவற்றை உடன் நிறுத்துக.

★ தமிழ் மாணவர்களுக்கான ஜி. சீ. ஈ. பரீட்சைகள், புலமைப்பரிசில் பரீட்சை, ஆசிரிய கலாசாலை பரீட்சைகளை உடன் நடத்துக.

★ பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் அரச படைகளால் திட்டமிட்டு அழிக்கப்படுவதை உடன் நிறுத்துக.

★ தமிழர் மீதான விமானத் தாக்குதலை உடன் நிறுத்துக.

★ தமிழ்ப் பாடசாலைகளில் முகாமிட்டுள்ள இராணுவத்தினரை உடன் வெளியேற்றுக.

★ தென்- தமிழீழத்தில் உள்ள தமிழ் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் உயிர், உடைமை பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கி அவர்கள் கல்வியைத் தொடர உதவுக.

★ எரிபொருள், பொருளாதாரத் தடைகளை உடன் நீக்குக.

★ கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தை மீண்டும் பழைய இடத்தில் இயங்கச் செய்து, அங்குள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோரின் உயிருக்கு உத்தரவாதம் வழங்குக.

## நட்புறவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிறார்கள் என்றும்—

புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதர் ஸ்டான்லி கல்பகே அறிவித்திருக்கிறார்.

இலங்கைத் தூதரின் இக்கருத்து அவரது சொந்தக் கருத்தா அல்லது இலங்கை அரசின் கருத்தா என்பது தெரியவில்லை என்று இந்தியா கூறியிருக்கிறது.

டாக்டர் கல்பகே இப்படி கூறியிருப்பது வருந்தத் தக்கது என்றும் இந்தியா கூறியுள்ளது.

டாக்டர் கல்பகே ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக விரைவில் பதவி ஏற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ எ]

## அகதிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பு இராணுவ வட்டாரங்களை ஆதாரங் காட்டி இந்திய வானொலி நேற்று இதனை அறிவித்தது.

அரச படையினர் அப்பகுதியில் நடத்தி வரும் பாரிய இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து அகதிகள் வெளியேற்றம் இடம் பெறுவதாகவும் அறிவிக்கப்பட்டது. [உ-எ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02-3-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org